பிரதம செயலாளர் செயலகம்,வடக்கு மாகாண சபை
ප්‍රධාන ලේකම් කාර්යාලය, උතුරු පළාත් සභාව
Chief Secretary's Secretariat, Northern Provincial Council

63, நல்லூர் குறுக்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
63, නල්ලූර් හරස් පාර, නල්ලූර්, යාපනය.
63, Nallur Cross Street, Nallur, Jaffna.

Telephone : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
Website : www.np.gov.lk
e-mail : chiefsecnpc@gmail.com

**My No: NP/09/AP/CIR/2016**

29 ..02.2016

**மாகாண நிதிச்சுற்றுநிருப இல: - PF/AP/03/2016**

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடக்கு மாகாணம்.

**நடைமுறையல்லாச் சொத்துக்களின் முகாமைத்துவம்**

அரச கணக்குகள் திணைக்களத்தின் SA/AS/AA/Circular ம் இலக்கமும் 24.01.2013ம் திகதியும் கொண்ட சுற்றுநிருபத்தின் பிரகாரம், அட்டுறு அடிப்படையில் நிதிக் கணக்குகளைத் தயாரிக்க வேண்டியுள்ளது. எனவே, அட்டுறு அடிப்படையில் நிதிக்கணக்குகளைத் தயாரிப்பதற்கு நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி கண்டறியப்படவேண்டியமை அவசியமானதாகும். எனவே பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றி நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதியினைக் கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தாங்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**2. நடைமுறையல்லாச் சொத்துக்களின் முகாமைத்துவம் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள்**

2.1 நடைமுறையல்லாச் சொத்துக்கள் வருடாந்தம் ஒப்பாய்வு செய்யப்பட்டு இருப்புப் பதிவேடு பேணப்படுவதனால் அவை பற்றிய சரியான கணிய அடிப்படையிலான விபரங்களை இருப்புப் பதிவேட்டிலிருந்து அறியமுடியும், எனவே அவற்றின் பெறுமதியை மதிப்பிட பின்வருமாறு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

2.2 முறையான சொத்து முகாமைத்துவத்திற்கு நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதியினைக் காட்டக்கூடியவாறு அரச கணக்குகள் திணைக்களத்தின் SA/AS/AA/Circular ம் இலக்கமும் 12.07.2013ம் திகதியும் கொண்ட கடிதத்தின் பிரகாரமும், பின்னிணைப்பு-I ன் மாதிரிக்கு அமைவாகவும் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பதிவேடானது சகல அமைச்சுக்கள், திணைக்களங்களிலும் பேணப்படுதல் வேண்டும்.

பிரதிப் பிரதம செயலாளர்
නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම්
DEPUTY CHIEF SECRETARY

நிர்வாகம் / පරිපාලන / ADMINISTRATION — Tel : 021 320 2571 (Dir) : 021 222 0960 (Gen) Fax : 021 222 0950 e-mail : ppas.np@gmail.com

நிதி / මුදල් / FINANCE — Tel : 021 222 0850 (Dir) : 021 222 0854 (Gen) Fax : 021 222 0853 e-mail : nptreasury@gmail.com

திட்டமிடல் / කුමසම්පාදන / PLANNING — Tel : 021 223 0355 ( : 021 223 0451 ( Fax : 021 223 0354 e-mail : npplan@sltnet

ஆளணிப்பயிற்சி / පිරිස් පුහුණු / PERSONNEL TRAINING — Tel : 021 739 1250 (Dir) : 021 739 1254 (Gen) Fax : 021 739 1257 e-mail : npmdti@gmail.com

பிரதம உள்ளககணக்காய்வாளர் / ප්‍රධාන අභ්‍යන්තර විගණක / CHIEF INTERNAL AUDITOR — Tel : 021 222 0796 (Dir) : 021 222 9528 (Gen) Fax : 021 222 0796 e-mail : npcaudit@yahoo.com

2.3 ஒரே வகையான சொத்துக்களை ஒன்றாக வகைப்படுத்தி அவை ஒவ்வொன்றையும் குறிப்பாக வேறுபடுத்தி இனங்காணக்கூடியவாறு இணைப்பு-Vல் உள்ள அரச கணக்குகள் திணைக்களத்தின் SA/AS/AA/Circular ம் இலக்கமும் 12.07.2013ம் திகதியும் கொண்ட கடிதத்தில் குறிப்பிட்டவாறும், பின்னிணைப்பு- IIன் பிரகாரமும் பொருத்தமான ஏனைய விடயங்களையும் ஒன்றிணைத்து குறியீட்டு அடையாளத்தினை இடுதல் வேண்டும்.

2.4 இக் குறியீட்டின் அடிப்படையில் சகல சொத்துக்களினதும் பதிவுகள் பின்னிணைப்பு -I ல் காட்டப்படுதல் வேண்டும்.

2.5 நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி

2.5.1 கொள்வனவுப் பெறுமதி/கிரயம் அறியப்பட்ட சொத்துக்களின் பெறுமதியினை உரிய விபரங்களுடன் பின்னிணைப்பு- I ன் 5ம் நிரலில் காட்டப்படுதல் வேண்டும்.

2.5.2 கொள்வனவுப் பெறுமதி/கிரயம் அறியப்படாத சொத்துக்களைப் பின்வருமாறு நியமிக்கப்பட்ட குழு ஒன்றின் மூலம் மதிப்பீடு செய்தல் வேண்டும்.

| இல | சொத்தின் பெயர் | மதிப்பீடு செய்யவேண்டிய பொறிமுறை |
|---|---|---|
| 1 | காணி | விலை மதிப்பீட்டுத் திணைக்களம் |
| 2 | கட்டடங்கள் | பணிப்பாளர், கட்டடங்கள் திணைக்களம் அவர்களின் தலைமையின் கீழ் நியமிக்கப்படும் உபகுழுக்களைக் கொண்டு மதிப்பீடு செய்தல். (இவ் உப குழுக்களில் பொறியியலாளர் ஒருவர் இலங்கை கணக்காளர் சேவையைச் சேர்ந்த கணக்காளர் ஒருவர் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தைச் சேர்ந்த அலுவலர் ஒருவர் ஆகியோரை உள்ளடக்குதல் பொருத்தமானதாகும்.) |
| 3 | வாகனங்கள் | ஆணையாளர், மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் அவர்களின் தலைமையில் இயந்திரப் பொறியியலாளர் ஒருவர் கணக்காளர் ஒருவர் ஆகியோர் உள்ளடங்கலான மூவர் கொண்ட குழு |
| 4 | இயந்திரங்கள், பொறித் தொகுதிகள் | சம்பந்தப்பட்ட துறைசார் வல்லுநர் ஒருவரின் தலைமையில் கணக்காளர் ஒருவர் மற்றுமொரு பதவி நிலை அலுவலர் ஒருவர் உள்ளடங்கலான மூவர் கொண்ட குழு |
| 5 | தளபாடங்கள் | |
| 6 | கணினி | |
| 7 | அலுவலக உபகரணங்கள் | |
| 8 | ஏனைய சொத்துக்கள் | பொருத்தமான உப குழுக்கள் மூலம் மதிப்பீடு செய்தல் |

இவ்வாறு மதிப்பிடப்படும் சொத்துக்களின் பெறுமதியானது பொருத்தமான பின்னிணைப்பு- Iல் ஏற்கெனவே உரிய சொத்தில் குறிக்கப்பட்ட அடையாளத்தினைக் குறித்து அதன் விபரங்களைப் பூரணப்படுத்திப் பெறுமதியினை 5ம் நிரலில் குறித்துக் கொள்ளுதல் வேண்டும்.

2.6 எனவே, பின்னிணைப்பு-I ன் பிரகாரம், தேவைக்கேற்ப சொத்துக்களின் வகையினைக் கருத்திற்கொண்டு தயாரிக்கப்படும் நடைமுறையல்லாச் சொத்துப் பதிவேட்டில் ஒரே வகையான சொத்தினை தொடர்ச்சியாகப் பதிவு செய்து அவற்றின் பெறுமதி குறிக்கப்படுதல் வேண்டும். இவ்வாறே எல்லா வகையான சொத்துக்களும் பதிவு செய்யப்பட்டு முழுமொத்தப் பெறுமதி கண்டறியப்படல் வேண்டும்.

2.7 மேலும், குறிக்கப்பட்ட ஒரு சொத்திற்கு மேலதிகமாகச் சேர்க்கப்படும் (மூலதனத் தன்மையான செலவுகள் மட்டும் ) பாகங்களை அல்லது பகுதிகளை உரிய விபரங்களுடன் பின்னிணைப்பு Iல் உள்ள சேர்த்தல்கள் எனும் நிரலில் பதிவு செய்யப்படல் வேண்டும். இவ்வாறே அகற்றப்படும் சொத்துக்கள் தொடர்பான விபரங்கள் முடிவுறுத்தல்கள் என்ற நிரலில் உரிய விபரங்களுடன் பதிவு செய்யப்படும். இதன் பிரகாரம் பின்னிணைப்பு Iன் 15ம் நிரல் உரிய சொத்தின் தற்போதைய பெறுமதியினைக் காட்டும். இவற்றின் கூட்டு மொத்தம் குறிப்பிடப்பட்ட சொத்துவகையின் முழு மொத்தப்பெறுமதியாக அமையும்.

2.8 பின்னர், பொழிப்புத் தாள்/பொழிப்பு அட்டவணை(Summary sheet) ஒன்றினைப் பின்னிணைப்பு-III ன் பிரகாரம் தயாரித்து ஒவ்வொரு வகைச் சொத்துக்களினதும் மொத்தப் பெறுமதியினை அதிற் குறிப்பிடுவதன் மூலம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் மொத்தப் பெறுமதியினை அறிந்து கொள்ளமுடியும்.

2.9 கணினிகளைப் பொறுத்தவரை அவற்றையும் மேலே காட்டப்பட்டவாறு நடைமுறையல்லாச் சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்படுவதுடன் பொதுத்திறைசேரியின் IAI/2002/02ம் இலக்க 28.11.2002ம் திகதிய சுற்றுநிருபத்தில் (பின்னிணைப்பு-VI) அறிமுகப்படுத்தப்பட்டவாறு அவற்றின் முழுமையான பாகங்களையும் உள்ளடக்கியதான "கணினிப் பதிவேடு" ஒவ்வொரு கணினிக்கும் பேணப்படுதல் வேண்டும்.

மேற்குறித்த விபரங்களுக்கு அமைவாக நடைமுறையல்லாச் சொத்துக்களினது பெறுமதியினை மதிப்பீடு செய்வதன் மூலமாக அட்டுறு அடிப்படையிலான நிதிக்கூற்றுக்களை தயார்செய்வதுடன் ஒதுக்கீட்டுக் கணக்கு கூற்றுக்களில் நடைமுறையல்லாச் சொத்துக்களின் விபரத்தினை வெளிப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

எஸ்.யு. சந்திரகுமாரன்,
பிரதிப் பிரதம செயலாளர் - நிதி
பிரதம செயலாளருக்காக,
வடக்கு மாகாணம்

S.U.Chandrakumaran
Deputy Chief Secretary- Finance
Office of the Deputy Chief Secretary - Finance
Northern Province

பிரதிகள்:-

1. கௌரவ ஆளுநரின் செயலாளர், வ.மா — கௌரவ ஆளுநர் அவர்களிற்கு அறியத் தருவதற்காக
2. உதவிக் கணக்காய்வாளர் நாயகம், வ. மா } தகவலுக்காக
3. பிரதம உள்ளக கணக்காய்வாளர், வ. மா } தகவலுக்காக